## உணவுத் திருவிழாவிற்கு — பொதுமக்களும், உணவுப் பிரியர்களும் குடும்பத்துடன் வருகை தந்து

# மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு ஆதரவு அளிக்க வேண்டும்!

## சென்னை — பெசன்ட் நகர் கடற்கரையில் — உணவுத் திருவிழாவைத் தொடங்கி வைத்து — துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, டிச.22-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, பெசன்ட் நகர் கடற்கரையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களின் மதி உணவுத் திருவிழாவை திறந்து வைத்து பார்வையிட்டு, பாரம்பரிய உணவு வகைகளை சுவைத்துப் பார்த்தார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண்கள் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என்பதற்காக 1989-ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களை தொடங்கி வைத்தார். அன்று அவர் தொடங்கிய மகளிர் சுய உதவிக்குழுக்களை மேம்படுத்தும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சராக இருந்த போது அனைத்து மாவட்டங்களுக்கும் நேரில் சென்று தனது கரங்களால் ஆயிரக்கணக்கான மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி சேமிப்புப் புத்தகம் மற்றும் கடனுதவிகளை வழங்கினார்.

அதுவரை பெண்கள் வங்கிகளுக்கு சென்று தங்கள் தேவைகளை கேட்க தயங்கிய நிலை மாறி, தற்போது பெரும்பாலான வங்கிகளின் முக்கியமான மற்றும் மரியாதைக்குரிய வாடிக்கையாளர்களாக மகளிர் சுய உதவிக்குழுவினர் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேலும் வளப்படுத்தும் நோக்கத்துடன் துணை முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அத்திட்டங்களின் பயனாக இன்று ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களில் 4.96 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரத் தேவையைக் கருத்தில் கொண்டு, கடந்த ஐந்தாண்டுகளில் 21,08,697 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 2,74,13,061 உறுப்பினர்களுக்கு 1,38,564.85 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்திட, மதி அங்காடி, மதி அனுபவ அங்காடி, மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள், மதி இணையதளம், மதி சிறுதானிய உணவகம், இயற்கைச் சந்தைகள் மற்றும் விற்பனைக் கண்காட்சிகள் என பல்வேறு செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### 38 அரங்குகள்!

மிகப்பெரிய உணவகங்களில் சமைக்கப்படும் எவ்வளவு உயர்ந்த விலையிலான உணவு என்றாலும், வீட்டில் பெண்களின் கைப்பக்குவத்தில் சமைக்கப்படும் உணவு வகைகளுக்கு ருசியிலும், தரத்திலும் ஈடுசெய்ய முடியாது. அத்தகைய பெண்கள் இணைந்த மகளிர் சுய உதவிக்குழுவினர் தயாரித்த உணவு பொருட்கள் மற்றும் உணவு வகைகளை அனைவரும் அறிந்திட வேண்டும் என்பதற்காக சென்னை, பெசன்ட் நகர் கடற்கரையில் உணவுத் திருவிழா அமைக்கப்பட்டுள்ளது.

உணவுத் திருவிழாவில், 235க்கும் மேற்பட்ட உணவு வகைகளை உடனடியாக சமைத்து, சுகாதாரமான முறையில் பரிமாறும் வகையில் 38 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 12 அரங்குகளில் காஞ்சிபுரம் 20 வகையான முட்டை மிட்டாய்கள், கன்னியாகுமரி பலதரப்பட்ட சிப்ஸ் வகைகள், பெரம்பலூர் முத்து சோளம், நாமக்கல் புரதச் சத்து நிறைந்த முட்டை உணவுகள், ராமநாதபுரம் பனை மதிப்புக் கூட்டுப் பொருட்கள், நீலகிரி பாரம்பரிய தேநீர், சேலம் மளிகைப் பொருட்கள், சிவகங்கை செட்டிநாட்டுத் தின்பண்டங்கள், 90களில் (90s Kids) பிரசித்திப் பெற்ற 30 வகையான திருவள்ளூர் தின்பண்டங்கள் போன்ற பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

உணவுத் திருவிழா நடைபெறும் நாட்களில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு உணவு வகைகளின் தரத்தை மேம்படுத்துவது, சுகாதாரமான முறையில் பரிமாறுவது, விற்பனை நுணுக்கங்கள், சந்தைப்படுத்துதலில் உள்ள சவால்களை எவ்வாறு களைவது போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளன.

சென்னை, பெசன்ட் நகர் கடற்கரையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் உணவுப் பொருட்களின் உணவுத் திருவிழாவை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.12.2025) திறந்து வைத்து பார்வையிட்டார். அரங்கங்களில் மகளிர் சுய உதவிக்குழுவினரால் தயாரிக்கப்பட்ட பாரம்பரிய, சைவ, அசைவ, சிறு தானிய உணவுப் பொருட்களை ருசி பார்த்து செய்முறை மற்றும் விற்பனை அனுபவம் குறித்து கலந்துரையாடினார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

பின்னர் துணை முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இன்றைக்கு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க மகளிர் சுய உதவிக்குழுக்களின் சார்பாக பெசன்ட் நகர் கடற்கரையில் இன்றிலிருந்து வருகின்ற 24ந் தேதி வரை தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களுடைய மாவட்டங்களில் பிரபலமான உணவு வகைகளை சமைத்து விற்பனை செய்ய 50 கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 70 குழுக்களைச் சேர்ந்தவர்கள் வந்துள்ளார்கள். அடுத்த நான்கு நாட்களுக்கு பெசன்ட் நகர் கடற்கரையில் அரசின் சார்பாக இந்த உணவுத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மெரினா கடற்கரையில் நம்முடைய துறை 5 நாட்களுக்கு உணவுத் திருவிழாவினை நடத்தியிருந்தது. அதில் எல்லா விதமான சைவம் மற்றும் அசைவ உணவுப் பொருட்கள் தரமாக சமைத்து பரிமாறப்பட்டது. உணவுத் திருவிழாவினை பார்வையிட வந்த பொதுமக்கள் சாப்பிடுவதற்கும், கைகழுவவும், ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. கடற்கரை உணவுத் திருவிழாவிற்கு வந்த நினைவுகள் நீங்காமல் இருக்க புகைப்படங்கள் எடுத்துக் கொள்ள செல்பி பாயிண்ட்ஸ் ஏற்பாடு செய்யப்பட்டது.

சென்ற ஆண்டு 1 கோடியே 50 லட்சம் ரூபாய் அளவிற்கு சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் தாங்கள் தயாரித்த உணவுப் பொருட்களை விற்பனை செய்திருந்தார்கள்.

கடந்த நவம்பர் மாதம் மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற உணவுத் திருவிழாவில் 62 இலட்சம் ரூபாய் அளவிற்கு உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

இன்று பெசன்ட் நகர் கடற்கரையில் துவக்கி வைத்திருக்கின்றோம். சுத்தமான முறையில் உணவு பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றி பரிசோதிக்கப்பட்டு, உணவுப் பொருட்கள் இங்கே வழங்கப்படுகின்றன.

குறிப்பாக அரையாண்டுத் தேர்வு விடுமுறை, கிறிஸ்துமஸ் இவற்றை முன்னிட்டு மகளிர் சுய உதவிக் குழுக்களின் சகோதரிகள் உணவுத் திருவிழா நடைபெறும் தேதிகளை முடிவு செய்தார்கள். இந்த உணவுத் திருவிழாவிற்கு சென்னையில் உள்ள பொதுமக்கள், உணவு பிரியர்கள் தங்கள் குடும்பத்துடன் எல்லோரும் வருகை தந்து, உணவு வகைகளை ருசித்து, மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, வாழ்ந்து காட்டுவோம் திட்ட முதன்மை இயக்க அலுவலர் திருமதி ஆஷா அஜித், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (தெற்கு) அஃதாப் ரசூல், மாமன்ற உறுப்பினர் திருமதி ம.ராதிகா, அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மகளிர் சுய உதவிக் குழுவினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---



## தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட சமூக வலைதள துணை அமைப்பாளர்கள் நியமனம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

*கழகத் தலைவர்–மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில்–தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.*

*இந்தப் பொறுப்புகளுக்கு தமிழ்நாடு முழுவதும் இருந்து 1,450–க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அவர்களை நேரில் அழைத்து, இதுவரை ஆற்றிய களப்பணிகள் மற்றும் சமூக வலைதளப் பணிகளை ஆய்வு செய்தோம். அவற்றின் அடிப்படையிலும், மாவட்டக் கழகச் செயலாளர் பரிந்துரையின் பேரிலும் இவர்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.*

*அந்த வகையில், இளைஞர் அணி மண்டலம்–3–க்குட்பட்ட கழக மாவட்டங்களுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சமூக வலைதள துணை அமைப்பாளர்களின் விவரம் வருமாறு:*

| வ. எண் | மாவட்டம் | துணை அமைப்பாளர் (சமூக வலைதளம்) |
|---|---|---|
| 1 | இராணிப்பேட்டை | **அ.அருண்,** 2/20, லாசர் தெரு, அம்பேத்கர் நகர், அரக்கோணம் - 631001 |
| 2 | காஞ்சிபுரம் தெற்கு | **ம.வி.இளம்பரிதி** 24-ஏ/1, நிமந்தக்கார ஒத்தவாடை தெரு, காஞ்சிபுரம் - 631502 |
| 3 | காஞ்சிபுரம் வடக்கு | **வீ.தினேஷ்** 6-ஏ, ஆனந்தன் தெரு, திருவள்ளுவர் நகர், பம்மல், சென்னை - 600075 |
| 4 | திருப்பத்தூர் | **க.நதீம் அஹமத்,** 337, டி.என்.ஹௌச்.பி. ஃபேஸ்-1, திருப்பத்தூர் - 635601 |
| 5 | திருவண்ணாமலை தெற்கு | **பி.செல்வம்** 140, பள்ளிக்கூடத் தெரு, கீழ் கச்சிராப்பட்டு, மெய்யூர், திருவண்ணாமலை - 606753 |
| 6 | திருவண்ணாமலை வடக்கு | **கோ.விக்னேஷ்** 18, சேர்மன் சபாபதி தெரு, போளூர், திருவண்ணாமலை - 606803 |
| 7 | வேலூர் தெற்கு | **முனைவர் கா.தீனதயாளன்** 1, ஆசிரியர் 2-வது தெரு, அம்மன் நகர், வசந்தபுரம், வேலூர் - 632001 |
| 8 | வேலூர் வடக்கு | **கோ.வி.தூயவன்** 12/13, கோயில் தெரு, கெம்மங்குப்பம், கே.வி.குப்பம், வேலூர் - 632201 |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21.12.2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---

## திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை! துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

# திருவொற்றியூர் கிழக்கில் நலத்திட்ட உதவிகள் - பொதுக்கூட்டம்!

## தி.மு.தனியரசு ஏற்பாடு! கலாநிதி வீராசாமி — கே.பி.சங்கர் பங்கேற்பு!

*சென்னை, டிச.22-*

திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை ஆற்றி நலத்திட்ட உதவிகளான பெண்களுக்கு தையல் மிஷின் வழங்கினார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், திருவொற்றி யூர் தொகுதி பார்வையாளர் தி.நகர் எஸ். மோகன், வீ.கவி கணேசன், குறிஞ்சி எஸ்.கணேசன், வி.ராமநாதன், சாந்தி பக்தன், டி.ஏ. ராஜ், ஆர்.சி. ஆசைதம்பி, எம்.வி.குமார், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், த.கார்த்திகேயன், டி.சி. வி.மணிகண்டன், எம்.எல். சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குருத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், எஸ்.பாஸ்கர், பி.எஸ். சைலஸ், ஆர்.ரஜினிபாபு, ஒய்.ரஜினிநந்தி, ஆர்.டில்லி, ஆர்.தினேஷ்குமார், முருகா, எஸ்.ஆறுமுகம், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

## மாவட்ட — கழக அயலக அணி சார்பில்

# கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தில் - சமூக நல்லிணக்க குழந்தைகள் விழா!

## மாவட்ட அமைப்பாளர் பாலூர் தேவா நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்றது!

*நாகர்கோவில், டிச.22*

கன்னியாகுமரி மேற்கு மாவட்ட அயலகஅணி அமைப்பாளர் பாலூர் தேவா ஏற்பாட்டில் சமூக நல்லிணக்க குழந்தைகள் விழா சிறப்பாக நடைபெற்றது.

நேற்று (21.12.2025) கன்னியாகுமரி மேற்கு மாவட்ட திமுக அயலக அணி மற்றும் தமிழ் என்.ஆர்.ஐ குடும்ப நல கூட்டமைப்பின் ஆண்டு விழா, சமூக நல்லிணக்க குழந்தைகள் விழாவாக கொண்டாடப்பட்டது.

கன்னியாகுமரி மேற்கு மாவட்ட அயலகஅணி அமைப்பாளர் பாலூர் தேவா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், சேலம் சிக்கந்தர், மாவட்ட துணை அமைப்பாளர் ஏ. ராஜ், கிள்ளியூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கோபால், மிஞ்சிறை கிழக்கு ஒன்றிய செயலாளர் மாஸ்டர் மோகன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி சிபித். த. தாஸ், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஜோசப்ராஜ், குவைத் திமுக பொறுப்பாளர் ஜோசப் எடிசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் மாநிலப் பேச்சாளர்கள் என்.ஆர். மணி, சிலம்பை டென்னிசன், இளம் பேச்சாளர் ஹரணி, இளைஞர் அணி துணைச் செயலாளர் பைஜூ, வழக்கறிஞர் ஜெபஜாண், கிள்ளியூர் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் துரைராஜ், ஜனோ ரெனிட்டர்ஸ், தங்கதுரை, அயலகஅணி நிர்வாகிகள் திருவை நசீர், தக்கலை ரவி, குழித்துறை தாணுபிள்ளை, கிள்ளியூர் பிரான்சிஸ் சேவியர், லூனா பீனா, எட்வின் ஜோஸ், மெல்வின், பிபின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் சுமார் 350 பேர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். மூத்த கழக முன்னோடி களான பாலூர் பிரான்சிஸ், மாணிக்கம், இம்மானுவேல் ஆகியோருக்கு "கலைஞரின் கண்மணி" விருது வழங்கப்பட்டது.

மேலும், பத்தாம் வகுப்பு தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மூன்று மாணவிகளுக்கு பள்ளி சிறந்த மாணவி விருது, ரோபாட்டிக்ஸ் துறையில் சிறந்து விளங்கிய மாணவருக்கு இளம் விஞ்ஞானி விருது வழங்கப்பட்டது.

விழா நிகழ்ச்சியின் இடையே, பள்ளி குழந்தைகள் இடம் முதலமைச்சரின் திட்டங்களை குறித்து வினாடி வினா நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. ஐந்தாம் வகுப்பிற்கு கீழ் படிக்கும் 100 பள்ளி குழந்தை களுக்கு புத்தாடைகள் மற்றும் கிறிஸ்மஸ் பரிசுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

பள்ளிக் குழந்தைகளுடன் விழாவில் திரளாக மகளிர் பங்கேற்றனர்.

விழா முடிவில் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் கேக் வழங்கப்பட்டது.

---



மதுரை மாவட்டம், மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பின்படி தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (தொழில் துறை) சார்பில் 9.60 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 314.29 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மதுரை தகவல் தொழில்நுட்பப் பூங்கா கட்டுமான பணிகளை தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆய்வு செய்து பார்வையிட்டார். உடன் மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி,மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள், கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் மதுரை பாலா ஆகியோர் உடன் உள்ளனர்.